க்ரோதி ஹு ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2024

மலர்: 7
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





கடை ச்ரவணம்

ஸ்ரீ:

க்ரோதி ஸூ ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2024

மலர்: 7
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஐப்பசி மாதம் என்றாலே ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவர் உள்ளங்களிலும் தோன்றுவது இன்கவிபாடும் பரம கவிகளான முதலாழ்வார்களின் அவதார தினங்களே.

ஸ்வாமி தேசிகன் தாம் ஸாதித்த திருக்கோவலூர் ஆயனார் விஷயமான தேஹளீச ஸ்துதியில்

''பெண்ணையாற்றில் விளைந்த கட்டிக்கரும்பான ஆயனான உன்னை பொய்கை, பூதம், பேயாழ்வார்கள் ஒரு இரவிலே இடைகழியில் ஸந்தித்து அந்த கரும்புச்சாறு எடுக்கும் யந்திரமாகிய இடைகழியில் உன்னை நெருக்கி மூன்று அந்தாதிகளாகிய கரும்புச் சாற்றினை அனுக்ரஹித்தனர். அச்சாறானது உன் பக்தர்களுக்கு போக்யமான உன் திருவடித்தாமரையின் மதுதாரையில் கலந்த சர்க்கரைப்போல் ஆயிற்று'' என்று மிகவும் ரஸமாகவும் ச்லாக்யமாகவும் இம்முதலாழ்வார்களைப் பற்றி அருளிச்செய்துள்ளார்.

மேலும் ஸ்ரீபாஷ்யகாரரின் ஜ்ஞான புத்ரரும் நம் ஸம்ப்ரயதாத்தில் நான்கு க்ரந்தகளுக்கும் ஸ்ரீபாஷ்யகாரருக்குப்பின் உபதேசம் செயதருளியவருமான திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருப்பூராடம் நக்ஷத்ரத்தில் அவதரித்ததும் இந்த ஐப்பசி மாதத்திலேயே. இவர் அருளிய திருவாய்மொழி வ்யாக்யானமான திரு ஆறாயிரப்படியே மற்றுமுள்ள அனைத்து வ்யாக்யானங்களுக்கும் மூலமாக அமைந்தது.

ஸ்ரீக்ருஷ்ணன் நலியும் நரகனை வீழ்த்திய தினமும், பண்டித பாமரர் வேறுபாடின்றிக் கொண்டாடும் தினமான தீபாவளிப் பண்டிகையும் இந்த மாததிலேயே அமைந்துள்ளது.

இந்த இதழில் மிகச்சிறந்த வித்வானும் பரம ரஸிகருமான ஸ்ரீ D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி அனுக்ரஹித்த முதலாழ்வார்களின் வைபவமான ''வெளிகாட்டும் அம் மெய்விளக்கே'' என்கிற கட்டுரையும், ஸ்ரீமதஹோபில மடம் 40-ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் அருளிய நம் ஸந்நிதியைப் பற்றின ஒரு குறிப்பும், நம்மாழ்வாரின் திருநாமச் சிறப்பினைப் பறைசாற்றும் வ்யாஸமும், மிகவும் பக்தியில் ஆழங்கால் பட்ட பாகவதோத்தமர்களைப் பற்றிய கட்டுரையும், ஆங்கிலத்தில் வழக்கம்போல் தோன்றும் இரண்டு ஸம்ப்ரதாய வரைவுகளுடன், திருப்பவித்ர உத்ஸவ காட்சிகளும், நவராத்ரி உத்ஸவம் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ரோதி வருடத்திய திருநக்ஷத்ர படங்களுடன் உங்கள் கரங்களில் ஐப்பசி மாத தேசிக ஸந்தேசம்.

ஸ்ரீ:

# Aippasi Vibes All Set To Engulf

## FROM THE DESK OF TRUSTEES

In the spiritually significant month of Purattasi, three major annual utsavams were celebrated with great devotion and grandeur.

**Pavithrotsavam**

The Annual Pavithrotsavam, one of the most sacred festivals of the year, was observed over seven days, marking a period of purification and renewal. Each morning and evening featured a Homam, accompanied by the recitation of the 4,000 sacred verses of the Azhwars and the Desika Prabandham as also Vedic chanting. All four Vedas were chanted alongside the Divya Prabandham, creating a powerful spiritual resonance. With over 200 scholars participating in the recitations, the collective chanting of Vedic mantras and Prabandham fostered a deep sense of peace and spiritual clarity among the attendees. Many devotees expressed their heartfelt gratitude for the opportunity to participate in this sacred event.

**Annual DesikaN Utsavam**

Following Pavithrotsavam was the Annual Desikan Utsavam, dedicated to the great Acharya Sri Vedanta Desikan. The event saw a remarkable turnout of devotees who enthusiastically participated in the daily rituals. The vibrant decorations, combined with the fervent devotion of the devotees, created an uplifting atmosphere that reinforced the bond within our community.

**Navarathri celebrations**

The Navarathri celebrations were filled with joy and devotion. Each evening featured a special Purappadu, with the grand finale on the Maha Navami Day, coinciding with Swami Desikan's Thirunakshatram this year. This event brought the community together in a spirit of unity and celebration.

Additionally, all four Saturdays of the Purattasi month witnessed a large number of devotees, and Pasadams were generously distributed throughout the month. We extend our gratitude to the Ubhayadhars for their support in making this possible.

**Welcoming Aippasi (Thula Masam)**

As we transition into the month of Aippasi, also known as Thula Masam, it brings with it a special sense of devotion and reflection. This time of the year is significant in our calendar, marked by auspicious festivals and rituals that deepen our connection with the divine.

Aippasi is particularly renowned for the celebration of Deepavali, the festival of lights, symbolising the victory of light over darkness and good over evil. The rituals include lighting lamps, bursting fireworks, and sharing sweets, fostering a spirit of joy and harmony. It is also considered an auspicious time to initiate new ventures and undertake important activities.

With the weather transitioning from the intense heat of summer to cooler, more pleasant conditions, Appasi fosters a sense of renewal and harmony with nature. This month encourages spiritual growth, gratitude, and community bonding.

In summary, Aippasi is a time of celebration, gratitude, and spiritual reflection, deeply rooted in Tamil culture and tradition. It encourages communities to come together, honour their heritage, and engage in meaningful practices that promote well-being and prosperity.

We invite everyone to actively participate in the upcoming events, including special Poojas and community gatherings. These occasions not only enrich our spiritual experience but also strengthen the bonds within our temple community.

Wishing you all a blessed month filled with grace and abundance.

ஸ்ரீ:

## க்ரோதி வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் / நவம்பர் | ஐப்பசி | | | | | |
| | | | | | | |
| 18.10.2024 | 1 | ப்ரதமை | வெள்ளி | அச்வினி | பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 19.10.2024 | 2 | த்விதீயை / த்ருதீயை | சனி | பரணி | திருமால்வடை | |
| 20.10.2024 | 3 | த்ருதீயை / சதுர்த்தி | ஞாயிறு | க்ருத்திகை | திருமங்கையாழ்வார் | |
| 21.10.2024 | 4 | சதுர்த்தி / பஞ்சமி | திங்கள் | ரோஹிணி | கண்ணன், திருப்பாணாழ்வார் | |
| 22.10.2024 | 5 | பஞ்சமி / ஷஷ்டி | செவ்வாய் | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 23.10.2024 | 6 | ஷஷ்டி / ஸப்தமி | புதன் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 24.10.2024 | 7 | ஸப்தமி / அஷ்டமி | வியாழன் | புனர்வஸு | ஸ்ரீ ராமர் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | V.D.R. பண்ட் |
| 25.10.2024 | 8 | அஷ்டமி / நவமி | வெள்ளி | புஷ்யம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு | அழிசூர் ஸ்ரீ A. வீர ராகவன் & அழிசூர் ஸ்ரீ A.V. ராமன் |
| 26.10.2024 | 9 | நவமி | சனி | ஆயில்யம் | திருமால்வடை | |
| 27.10.2024 | 10 | தசமி / ஏகாதசி | ஞாயிறு | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 28.10.2024 | 11 | ஏகாதசி | திங்கள் | பூரம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | பௌண்டரீகபுரம் ஸ்ரீ ராஜகோபாலன் |
| 29.10.2024 | 12 | த்வாதசி / த்ரயோதசி | செவ்வாய் | உத்திரம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் |
| 30.10.2024 | 13 | த்ரயோதசி | புதன் | ஹஸ்தம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. எண்ணெய் குடம் வீதி வலம் வருதல் | ஸ்ரீ ஸ்ரீராமன் குடும்பத்தினர் & ஸ்ரீ K.S.N. குடும்பத்தினர் |
| 31.10.2024 | 14 | சதுர்தசி | வியாழன் | சித்திரை | தீபாவளி பண்டிகை. காலை பெருமாள், தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ R. வாஸுதேவன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01.11.2024 | 15 | அமாவாசை | வெள்ளி | ஸ்வாதி | காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. தாயார் உள்புறப்பாடு. பேயாழ்வார் உத்ஸவம் 1-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை. | வெள்ளிக்கிழமை: ஸ்ரீ ருக்மணியம்மாள் பண்ட். அமாவாசை: ஸ்ரீ T.E. தேசிகாச்சாரி குடும்பத்தினர். ஸ்ரீ பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 02.11.2024 | 16 | ப்ரதமை | சனி | விசாகம் | பெருமாள் அன்னகூட உத்ஸவம். பெருமாள் திருமஞ்ஜனம். பேயாழ்வார் உத்ஸவம் 2-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | அன்னகூட உத்ஸவம்: ஸ்ரீ S. கோபால க்ருஷ்ணன் |
| 03.11.2024 | 17 | த்விதீயை | ஞாயிறு | அனுஷம் | பேயாழ்வார் உத்ஸவம் 3-ம் நாள். காலை பேயாழ்வார் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 04.11.2024 | 18 | த்ருதீயை | திங்கள் | கேட்டை | பேயாழ்வார் உத்ஸவம் 4-ம் நாள். காலை பேயாழ்வார் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 05.11.2024 | 19 | சதுர்த்தி | செவ்வாய் | மூலம் | பேயாழ்வார் உத்ஸவம் 5-ம் நாள். காலை பேயாழ்வார் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 06.11.2024 | 20 | பஞ்சமி | புதன் | பூராடம் | ஸேனைநாதன் சாற்றுமுறை. பெருமாள், ஸேனைநாதன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஸேனைநாதன் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. பேயாழ்வார் உத்ஸவம் 6-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸேனைநாதன் உத்ஸவம்: ஸ்ரீமதி சோபனா ராமரத்னம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07.11.2024 | 21 | ஷஷ்டி | வியாழன் | உத்திராடம் | பேயாழ்வார் உத்ஸவம் 7-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ் ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்று முறை. தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி உத்ஸவம். காலை தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | |
| 08.11.2024 | 22 | ஸப்தமி | வெள்ளி | ச்ரவணம் | பொய்கையாழ்வார் திரு நக்ஷத்ரம். காலை பெருமாள், பொய்கையாழ்வார், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆழ்வார், தேசிகன் வீதி புறப்பாடு, ஸேவாகாலம், சாற்று முறை. பேயாழ்வார் உத்ஸவம் 8-ம் நாள். காலை பேயாழ்வார் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ் ஜனம். மாலை திருப்பாவை சாற்று முறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | பொய்கையாழ்வார் உத்ஸவம் & ச்ரவணம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யார் |
| 09.11.2024 | 23 | அஷ்டமி | சனி | அவிட்டம் | பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், பூதத்தாழ் வார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதி புறப்பாடு, ஸேவாகாலம், சாற்று முறை. பேயாழ்வார் உத்ஸவம் 9-ம் நாள். காலை பேயாழ்வார் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ் ஜனம். இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | பூதத்தாழ்வார் உத்ஸவம்: ஸ்ரீ S.T. நரஸிம்ஹாசார்யார் குடும்பத்தினர் |
| 10.11.2024 | 24 | நவமி | ஞாயிறு | சதயம் | பேயாழ்வார் திருநக்ஷத்ரம். காலை மங்களாசாஸனம். வீதி புறப்பாடு. பெருமாள், தாயார், ஆழ்வார் திருமஞ்ஜனம். பெருமாள், தாயார், ஆழ்வார் பத்தி உலாத்தல். பெருமாள், ஆழ்வார் வீதி புறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 11.11.2024 | 25 | தசமி | திங்கள் | பூரட்டாதி | கந்தப்பொடி வஸந்தம். பேயாழ்வார் வீதிபுறப்பாடு. | |
| 12.11.2024 | 26 | ஏகாதசி | செவ்வாய் | உத்திரட்டாதி | பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். வீதிபுறப்பாடு. | ஓலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன் |
| 13.11.2024 | 27 | த்வாதசி / த்ரயோதசி | புதன் | ரேவதி | திருமால்வடை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14.11.2024 | 28 | த்ரயோதசி / சதுர்தசி | வியாழன் | அச்வினி | திருமால்வடை | |
| 15.11.2024 | 29 | பௌர்ணமி | வெள்ளி | பரணி | பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம். பெருமாள் வீதிபுறப்பாடு, தாயார் உள்புறப்பாடு | பௌர்ணமி: ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன். வெள்ளிக்கிழமை: மாங்குடி ஸ்ரீ P. ரங்கராஜன் |

# மஹானின் மங்களாசாஸனம்

பேயாழ்வாரின் திரு அவதாரஸ்தலம் திரு மயிலாப்பூர். இவ்விடத்திலுள்ள ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடையவும், ஸ்ரீ ஹயக்ரீவனுடையவும் திவ்யமங்கள விக்ரஹங்கள் மிகவும் ப்ராசீனமானவைகள். இந்த திவ்யதேசத்தில் ஸ்ரீநிவாஸனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை திருப்ரதிஷ்டை செய்ய வேண்டுமென்று அநேக ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திகர்களுக்கு ஒரு ஆசை உண்டாயிற்று. அந்த ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் ஸ்ரீநிவாஸனின் திவ்யமங்கள விக்ரஹத்தை சோளதேசத்தில் வார்த்து வரவழைத்துக் கொண்டார்கள். அந்த திவ்யமங்கள விக்ரஹத்தை திருப்ரதிஷ்டை செய்வது விஷயமாய் சில சங்கைகளும், ஸம்சயங்களும் ஏற்பட்டன.

அந்த ஸமயத்தில் ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தானத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த **ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்** இந்த திவ்ய தேசத்திற்கு எழுந்தருளினார். அவ்விடத்திலுள்ள அசேஷ வித்வத் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ப்ரார்த்தனைப் படி அந்த திவ்யமங்கள விக்ரஹத்தை நன்றாய் ஸ்ரீ அழகியசிங்கர் கடாக்ஷித்தருளிவிட்டு, நல்ல லக்ஷணங்களுடன் திவ்யமங்கள விக்ரஹம் ஏற்பட்டிருப்பதாயும், திருப்ரதிஷ்டை செய்வதில் யாதொரு சாஸ்த்ர பாதகமுமில்லை என்றும், ஆனால் திருப்ரதிஷ்டை கொஞ்சம் விளம்பித்துத் தான் நடக்குமென்றும், திருப்ரதிஷ்டை ஆனது முதல், விபவம் பொங்கி வழியுமென்றும் ஸாதித்துவிட்டு, பின் வரும் ஸ்ரீ முகத்தையும் ஸாதித்தருளினார்.

இந்த மயிலாப்பூர் திவ்ய தேசத்தில் ஸ்ரீ திருவேங்கமுடையான் நியமனத்தினால் ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகிற ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய ஸபையில், ஸபையாருடைய விசேஷ முயற்சியினால் பாலர்களுக்கு ஸ்தோத்ர பாட, வேத, திவ்யப்ரபந்த, காவ்யாதி ப்ரவசனங்களும், சிஷ்டா சாராநுஷ்டான ப்ரவர்த்தனங்களும், ஸம்ப்ரதாய அபிவ்ருத்திக்கு உபயுக்தமான உபந்யாஸாதிகளும் நடந்து வருவதை நேரில் பார்த்தும், இனி நடத்துவதாக உத்தேசித்திருக்கிற ஸ்ரீபூமி அலமேலுமங்கா ஸஹித ஸ்ரீநிவாஸ திவ்யமங்கள விக்ரஹ ப்ரதிஷ்டா, நித்யாராதன தேசிக ஸஹித பகவத் உத்ஸவ வேதாதி பாராயண, ஸ்தோத்ராதி பாராயண அபிவ்ருத்திகளைக் கேட்டும், 'கலௌ வேங்கட நாயக:' என்கிறபடி ஸ்ரீநிவாஸன் இந்த ஸம்பரதாய ப்ரவர்த்தந ஸம்ரக்ஷணா அபிநிஷ்டனாக இருப்பதை நினைத்து அத்யந்தம் ஆனந்திக்கிறோம்.

இந்த ஸர்வோபகாரணமான நிரதிசய மஹா கைங்கர்யத்தில் ஆஸ்திகர்களான எல்லோரும், அன்வயித்து யதா சக்தி த்ரவ்யோபகாரத்தையும், வாக் ஸஹாயத்தையும் செய்து பூர்த்தி பண்ணி, ஸ்திரமாக நடத்திவைத்து, பகவத்க்ருபை பூர்வக ஸர்வ புருஷார்த்தங்களையும் கைக்கொள்ளவேணும். இந்த மஹா கைங்கர்ய விஷயத்தை, நிர்விக்நமாயும், ஸ்திரமாயும், பூர்த்தி பண்ணிவைத்து மிகவும் அனுக்ரஹிக்க வேண்டுமென ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ சடகோபஸ்ரீ:
பிங்கள - சித்திரை 20 (02.05.1917), மயிலாப்பூர்

**'ஸ்ரீ அழகியசிங்கர்களின் புகழ்மாலை' என்ற நூலிலிருந்து**

ஸ்ரீ:

# வெளிகாட்டும் அம் மெய்விளக்கே

ஸ்ரீ உ.வே. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

*பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்*
*மாட்டுக்கருள் தருமாயன் மலிந்து வருத்துதலால்*
*நாட்டுக்கிருள் செக நான்மறையந்தி நடைவிளங்க*
*வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டும் அம்மெய்விளக்கே.*

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தின் 30-வது அதிகாரமான ஆசார்யக்ருத்யாதிகாரத்தில் திகழும் திருப்பாசுரமிது. அவ்வதிகாரார்த்தத்தை ஸங்க்ரஹிக்கும் பாசுரத்துக்கு முன்னே நிற்பதால் முப்பத்திரண்டான முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவில் சேராத ஒரு தனித்திருமொழி. இதன் பொழிப்புரை பின்வருமாறு: எம்பெருமானைக் குறித்து கானம் செய்யத் தகுதி (அதிகாரம்) பெற்றமையால் அதற்கு உரிமையுடைய ப்ராசீநமான மூவர்களை (முதலாழ்வார்களை) பசுக்களுக்கு க்ருபை புரியும் ஆயன் (கோபாலன்: திருக்கோவலூர் ஆயன்) மிகவும் எளியவனாகி (ஸுலபனாகி) அம்மூவரைக் கசக்கி நெருக்கியபடியால், உலகத்திலுள்ள அஜ்ஞாநமாகிற இருள் நீங்கவும், வேதாந்தத்தின் போக்கு நன்கு விளங்கவும், ஒரு வீட்டின் இடைகழியில் (ரேழியில்) ஒளி வீசியது ஒரு ஸத்யதீபம்.

முதன்முதலாக இப்பாசுரத்தில் ஒரு அத்புத ரஸம் தோற்றுகிறதைக் கவனிக்க வேண்டும். உலகரீதியில் ஸாமாந்யமாக எந்த இடத்தில் ஒரு தீபம் ஏற்றப்படுகிறதோ அந்த இடத்தில் இருள் நீங்கும், வெளிச்சம் தோன்றும். இந்த விளக்கு ஏற்பட்டு வெளி (ப்ரகாசம்) காட்டியது ஒரிடைகழியில்; இருள் நீங்கியது நாட்டுக்கு; வெளிச்சம் வீசியது நான்மறையந்தியில், நடையென்றாலும் இடைகழியென்றாலும் தேஹளியைக் (ரேழியைக்) குறிக்கும். ஒரு வீட்டின் இடைகழியில் வெளிகாட்டிய விளக்கு வேறு ப்ரதேசத்தின் நடையில் (இடை சுழியில்) வெளிச்சம் வீசியதாம். சொற்சித்திரமான ச்லேஷையும், இயற்கையில் இல்லாத விசித்ரமும் தோற்றப் பாசுரம் அமைந்திருக்கிறது.

இந்தப் பாசுரத்தில் எந்த விளக்குப் பேசப் பட்டிருக்கிறதென்று ஆராயப்புக்கால் மூன்று யோசனைகள் தோன்றக்கூடும்.

(1) பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் முறையே ஏற்றிய இரண்டு தீபங்களாயிருக்கலாம். மறையின் குருத்தையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்திரித்து அன்று பொய்கைப்பிரான் வருத்தும் புறவிருளை மாய்க்க ஏற்றிய தீபம் ஒன்று. இறைவனைக் காணுமிதயத்திருள் கெட பூதத்தாழ்வார் ஏற்றிய நந்தா ஞானச்சுடர்விளக்கு ஒன்று. ஆனால் இவை இரண்டும் நெய் விளக்குகள். வார்கடலே நெய்யாகக்கொண்டு ஏற்றப்பட்டது பொய்கையார் தீபம், மற்றையது ஆர்வமே நெய்யாக ஏற்றப்பட்டது. இப்பாசுரத்தில் பேசப்படுவதோ மெய்விளக்கு. நெய் விளக்கன்று. **தீபேந கேநசிதசீத ருசா நிசீதே** என்று துடங்கும் தேஹளீச ஸ்துதி ச்லோகத்தில் அவ்வாழ்வார்கள் எற்றிய தீபம் கொண்டாடப்பட்டிருக்கிறது ஸ்வாமி தேசிகனால். மேலும் அதிகாரத்தின் இறுதிப் பாசுரத்தில் ஆசார்யர்கள் ஏற்றும் அழியா விளக்குப் புகழப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பாட்டுக்குரிய பழையவர் மூவரும் ஸம்பந்தப்பட்ட மெய் விளக்கு. பேயாழ்வார் மற்ற இருவரைப் போல் விளக்கேற்றியதாகத் தெரியவில்லை. இவை போன்ற காரணங்களால் ஆழ்வார்கள் இருவர் ஏற்றிய விளக்குகள் விஷயமல்ல இப் பாசுரத்துக்கு என்று தெளியலாம்.

(2) ஆழ்வார்கள் மூவரும் அருளிச்செய்திருக்கும் மூன்று திருவந்தாதிகளை மெய் விளக்காகப் போற்றிப் பேசியிருக்கலாம் என்ற ஒரு யோசனை எழுகிறது. இது அதிகாரத்தின் முடிவில் இப்பாசுரத் துக்கு அவ்யவஹிதமாகக் (அடுத்தபடியாகக்) காணும் வாக்யபங்க்திகளாலே உறுதி பெறுகிறது. பெருமாள் மறவாமல் காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்' என்ற உக்திகள் அங்கே திகழ்கின்றன. அது இன்றுமட்டும் நிகழ்ந்ததொன்றல்ல; பண்டொருக் காலே நிகழ்ந்தது என்று ஐதிஹ்யம் காட்டியருளுவாராய் இப் பாசுரத்தை அமைத்திருக்கிறார் ஸ்வாமி என்று நினைக்க இடமிருக்கிறது. பாசுரத்தில் கையாளப்பட்ட சொற்களெல்லாம் இவ்வபிப்ராயத்தையே வலியுறுத்துவன. இவ்வந்தாதிகளைப் பாடியவர்கள் பாட்டுக்குரியவர்கள் எனப் பாராட்டப் பெறுகிறார்கள். பழையவர் என்றதால் ஆதிகவிகள் என்றதாயிற்று. வடமொழிக்கு ஆதிகவி வால்மீகி என்றால் தமிழுக்கு ஆதிகவிகள் இம்மூவர். ஒருவர் கவிஞர் போரேறு; ஒருவர் பெருந்தமிழர்; ஒருவர் தமிழ்த்தலைவர். **இன்கவிபாடும் பரமகவிகள்** என்று நம்மாழ்வாரும், **செந்தமிழ் பாடுவார்** என்று கலியனும் எற்கனவே இம்மூவரைப் போற்றிப் பேசியிருக்கிறார்கள். ஸ்வாமியும் கவிமுக்யர்கள், கவீந்த்ரர்கள் என்றெல்லாம் தேஹளீச ஸ்துதியில் இவர்களைக் குறித்துப் பேசி மகிழ்கிறார். நிகமன ச்லோகத்தில் ஆதிபக்தர்கள் என்றே இவ்வாழ்வார்களை வ்யவஹரித்தருளுகிறார். இவ்வபிப்ராயங்களையெல்லாம் திருவுள்ளத்தில் கொண்டு பழையவர் என்ற பத ப்ரயோகம் அவர்கள் விஷயத்தில் எற்பட்டிருக்க வேண்டும்.



பாட்டுக்குரிய பழையவர் என்பதால் ஸாமகானம் செய்தும் பல்லாண்டே பல்லாண்டும் பாடியும் வரும் விண்ணவர் குழாங்களாகிய நித்யஸூரிகளில் மூவரென்றும் வ்யாக்யாதாக்கள் அபிப்ராயப் பட்டிருக்கிறார்கள்.

பண்டொருகால் - முன்பு ஒரு காலவிசேஷத்தில், ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் துவக்கிய ஒரிரவைப்போல் பெருமை பெற்று ஒப்பற்ற காலம். **க்வசந க்ஷபாயாம்** என்று தேஹளீச ஸ்துதி ப்ரயோகமும் காண்க.

மாட்டுக்கு அருள் தரும் ஆயன் - ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை அப்படியே அடியொற்றியது. இந்த நிகழ்ச்சியைப் பாராட்டப்புக்குப் பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் பாடிய பாசுரம் பின்வருமாறு:

*நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்*
*பாயும் பனிமறைத்த பண்பாளா – வாசல்*
*கடைகழியா உள்புகாக் காமர் பூங்கோவல்*
*இடைகழியே பற்றியினி.*

குன்றெடுத்துப்பாயும் பனிமறைத்த பண்பை யெண்ணித்தான் மாட்டுக்கருள்தரும் ஆயன் என்று பெருமாளை இங்கே வர்ணித்தது. மலிந்து வருத்தினமையும் **நீயும் திருமகளும்** பாசுரத்தி லிருந்துதான் வெளியாகிறது. பெருமாள் பிராட்டி ஸமேதராக அழகிய திருக்கோவலூர் இடைகழியைப் பற்றி, வாசலிலும் போகாமல் உள்ளேயும் போகாமல் ஆழ்வார்களை நெருக்கியபடி.

இந்த ஸம்மர்த்தத்தால் மெய்விளக்காம் திவ்யப்ர பந்தங்கள் வெளிவந்தன. இந்த ப்ரபந்தங்களை நூதன சர்க்கரையென தேஹளீச ஸ்துதியில் அநுபவித்து இன்புற்ற ஸ்வாமி, இங்கே அவற்றை மெய்விளக்கெனப் பேசி மகிழ்கிறார். சதுர்முக ப்ரஹ்மாவை முதலில் உண்டாக்கி அவருக்கு வேதங்களைக் (கை விளக்காகக்) கொடுத்தருளினார் என்று வேதம் ஒதுகிறது. இதை தயா சதசத்தில் ஸ்வாமி அழகாகப் பாராட்டுகிறார்.

*அநுகுண தசார்பிதேந ஸ்ரீதரகருணே ஸமாஹிதஸ்நேஹா।*
*சமயஸி தம: ப்ரஜாநாம் சாஸ்த்ரமயேந ஸ்திரப்ரதீபேந॥*

அது ஸ்திர ப்ரதீபமானதேயன்றி ஸத்ய ப்ரதீபமாகவில்லை. உண்மையை மறைத்துப் பேசிய மறையானபடியால் முதலாழ்வார்கள் திருவாக்கிலிருந்து அவதரித்த இப்பிரபந்தங்ளே மெய்விளக்கு.

ஆகவேதான் நாட்டாருக்கு இதுவரை தொடர்ந்து வந்த அஜ்ஞான இருள் இப்போதுதான் நசித்தது. நான்மறையந்தி - அந்த ஸ்திரப்ரதீபத்தின் ப்ரஹ்மகாண்டமான உபநிஷத் பாகத்தின் நடை (போக்கு) இப்போதே உள்ளபடி விளங்கிற்று.

**பொருள்மிகுத்த மறைவிளங்கப் புவியோருய்யத்...... திருவிளக்காமென வையந்தகளி நூறாஞ் செழும்பொருள்** என்று ப்ரபந்தஸாரத்தில் பொய்கையாழ்வார் விஷயமான பாசுரமும், **செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே** இத்யாதி அருளிச்செயல்களும் நான்மறையந்தி நடைவிளங்க என்பதை வ்யாக்யானம் செய்தருளுமவை. அந்தமிலாவாரண நாலாகி நின்றவதன் கருத்தை ஆழ்வார்களாய்ந்தெடுத்துச் செந்தமிழாலருள் செய்தமையைப் பாராட்டித்தானே ப்ரபந்தஸாரம் நிகமிக்கிறது! திருவிக்கிரமன் உயரத்தூக்கிய திருவடியிலிருந்து ‘த்ரிபதகா’ என்ற மூன்று ப்ரவாஹங்களுடைய கங்கை உத்பத்தியாகியது. அந்த கங்கையோ ப்ரஹ்மாவின் கமண்டல ஸம்பந்தமும் பசுபதியின் ஜடா ஸம்பந்தமும் பெற்றமையால் களங்கமுள்ளதாயிற்று. ஆகவே மீண்டும்,

*வேதாள பூத ஸரஸாம் அபதிச்ய வாசம்।*
*ப்ராயேண தத் ப்ரஸவ பூமிம் அவாப பூய:॥*

என்ற கணக்கிலே மீண்டும் ஒரு ஸ்ரோதஸ்த்ரயமாக அவர்கள் வாக்கினின்று வெளியாகி முன்பிருந்த களங்கம் நீங்கித் தெளிவாக விளங்கினது போல். நான்மறைகளும் ஸாமான்யபுத்தி ஜநகங்களான ‘ஸத்’ முதலிய சப்தங்களாலும் தத்வாந்தர ப்ரமத்தை விளைவிக்கக்கூடிய சிவாதி சப்தங்களாலும் ஏற்படக்கூடிய கலக்கங்களெல்லாம் கழிந்து உண்மைப் பரம்பொருளான ச்ரிய: பதியை விளக்கின, ஆழ்வார்கள் திருவந்தாதிகளோடு ஒரு வேதாந்தமாக ஐககண்ட்யம் செய்து பார்த்தபோது. பரதத்வம் இவ்வந்தாதிகள் அவதரித்த பிறகுதான் யதாவஸ்திதமாக ப்ரகாசித்தது. **அயமநவம ஸூக்தை: ஆதிபக்தைர் யதாவத் விசதிதநிஜ** தத்வரானார் தேஹளீசனும். ஒரு

நடையில் (ரேழியில்) ஆவிர்பவித்து நான்மறையந்தி நடையை விளக்க வைத்தார். உலகளந்த உத்தமன் ஒரு ரேழிப்பெருமாளானதால் உலகம் பெற்ற பேறு இது.

இவ்வளவு பெருமை வாய்ந்தமையால்தான் இவ்வந்தாதிகள் வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்ட வல்லமை பெற்றன. வீடு என்றால் மோக்ஷம். த்ருப்த ப்ரபந்நனுக்கு தேஹாவஸாநத்தில் மோக்ஷம் ஸித்தம். ப்ரபத்யநுஷ்டாந காலம் முதல் தேஹாவஸாநத்திலே எற்படும் மோக்ஷம் வரையில் உள்ள காலம் இடைக் காலம். அதைத்தான் வீட்டுக்கிடைகழியென்று இங்கே ஸ்வாமி நிர்த்தேசித்தருளுகிறார். உத்தர க்ருத்யம் ஸரிவர அநுஷ்டிக்கவேண்டிய போது,

*ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹுஸ்ஸத்பிரத்யாதமவித்யாம்।*
*நித்யம் ப்ரூதே நிசமயதிச ஸ்வாது ஸூவ்யாஹ்ருதாநி॥*

என்ற கணக்கில் போதுபோக்க உதவுவனவல்லவா திவ்யப்ரபந்தங்கள்? இந்த உத்தர க்ருத்யத்தில் இருள்புகாவண்ணம் நம்மைக்காத்து உண்மை யொளிவீசி உபகரிப்பன ஆழ்வார் அருளிச் செயல்கள். அவைகளே நமக்கு **வானேரப் போமளவும் வாழ்வு** என்பது தேசிகோபதேசம்.

(3) ஆழ்வார்கள் இருவர் அன்று ஏற்றிய இரு விளக்குகளும் மூவரும் ஏற்றிய அழியா விளக்கு களாகிய திருவந்தாதிகளும் நிற்க, இந்தப் பாசுரத்தில் பரதிபாதிக்கப்படும் மெய்விளக்கு ச்ரிய: பதியே என்றும் சொல்லலாம். உண்மையில் அன்று திருக்கோவலூரிடைகழியில் காணப்பட்டது தன்னைக் காணக்கொடுத்தது திருமாலாகிய திருவிளக்கேயன்றோ? அதுவரை பெருமாளையும் பிராட்டியையும் ஒன்று சேர்த்துக் கண்ட பேர்களுண்டோ? புருஷ ஸூக்தம் பிராட்டியைப் பத்நியாகக்கண்டது. ஸ்ரீ ஸூக்தம் பெருமாளை அவளுக்குப் பதியாகக் கண்டது. மிதுனத்தைக் கண்ட பேர்களுமில்லை. கண்டுவிண்ட பேர்களுமில்லை. **என் ஆழி வண்ணன்பால் இன்று திருக்கண்டேன்** என்றும், மலராள் தனத்துள்ளான் தண்டுழாய் மார்பன் என்றும் சொல்லும்படி ஒருவரில் மற்றொருவரை நேராகக் காணும்படி தன்னை ஸர்வேச்வரன் அதுவரை யாருக்காவது காட்டிக்கொடுத்தானா? ● பேயாழ்வார் விஷயமான ப்ரபந்தஸாரப் பாசுரத்தில் இந்த அபூதபூர்வமான நிலையை வெகு அழுகாகக் காட்டுகிறார் தேசிகோத்தமன். **துன்னிய பேரிருள் நீங்கச் சோதிதோன்றச் சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத் திருக்கண்டேஎன உரைத்த தேவே!** என்று விளிக்கிறார் பேயாழ்வாரை. அவர் ஜ்ஞாந சக்தியால் யோக சக்தியில் ஸாக்ஷாத்கரிக்க முயன்றது நெடுமாலை. நேரில் கண்டதோ திருமாலை. தோன்றிய சோதி திருமாலெனும் சோதி. அதைத்தான் இங்கே மெய்விளக்கு — **இடைகழிக்கே வெளிகாட்டும் அம்மெய்விளக்கு —** என்று பேசுகிறார். ஏற்றப்படாத போதும் தீபம் தீபம் தான். ஏற்றப்பட்ட பிறகு சுடரோடு ப்ரகாசிப்பது தான் மெய்யான தீபம். பெருமாள் மட்டும் தனிப்பட த்யானிக்கப்படும் போது ஏற்றாத தீபம் போன்றவர் அவர். பிராட்டி ஸமேதராக த்யானிக்கப்படும் போதோ, பார்க்கப்படும் போதோ மெய்விளக்காகத் தோற்றுவர்.

*தீபஸ்த்வமேவ ஜகதாம் தயிதா ருசிஸ்தே।*
*தீர்க்கம் தம: ப்ரதிநிவர்த்தயமிதம் யுவாப்யாம்॥*

என்ற சரணாகதி தீபிகா ச்லோகத்தில் சொன்னமாதிரி இந்த பிராட்டியாகிய காந்தி வீசும் பெருமாளாகிற தீபம்தான் நாட்டுக்கு இருளைப் போக்கித் தருவது. தீபமில்லாமல் காந்தியிருக்கமுடியாது. காந்தியில்லாத தீபத்தால் எவருக்கும் எப்பயனுமிலது. ஆகவே தான் **த்வாமேவாஹூ: கதிசிதபரே த்வத்ப்ரியம் லோகநாதம்।** என்று தொடங்கிப் பூர்வ பக்ஷங்களையெல்லாம் கழித்து **பகவதியுவாம் தம்பதீ தைவதம் ந:।** என்று ஸித்தாந்தித்துப் போந்தது ஸ்ரீஸ்துதியில். சாஸ்த்ரமாகிற கைவிளக்கையெல்லாம் பொய்விளக்காக்கும் நிலையில் மெய்விளக்காத் தோன்றிய திருமால் முதல்முன்னம் வெளிப்பட்டது திருக்கோவலூர் இடைகழியில்.

வேதம் அபௌருஷேயம். இன்ன காலத்தில் இன்னார் சொன்னது, இன்னார் முன் அரங்கேற்றப்பட்டது என்று கண்டறிய இயலாது. வேதபுருஷன் ராமபிரானாக அவதரித்தபோது வேதம் ஸ்ரீமத்ராமாயணமாக அவதரித்தது. அதற்குக் கர்த்தா வால்மீகி பகவான். ஆனால் அது பெருமாள் மட்டும் எழுந்தருளியிருந்த ஸதஸ்ஸில் அரங்கேற்றப் பெற்றது. பிராட்டி ஸாந்நித்யம் அப்போது இல்லை. **ஸீதாயாச்சரிதம் மஹத்** என்ற பெருமை பெற்ற போதும் திவ்ய தம்பதிகளது அபிநந்தனத்தைப் பெறவில்லை அவ்விதிஹாஸ ரத்னம் கூட. பெருமாள் அர்ச்சையில் எழுந்தருளிய தசையில் அவருடைய ஸ்வரூப ரூப குணவிபவங்களைப் புகழ்ந்து பேச வேதம் அருளிச்செயல் வடிவத்தில் அவதரித்தது.

இந்தத் தசையில்தான் அதற்கு திவ்ய தம்பதிகளது ஸாந்நித்யமும் பூர்ண ஆபிமுக்யமும் கிடைத்தன. அத்தம்பதிகளே ப்ரேரிதாக்கள். அவர்களே அந்த ப்ரபந்தங்களைத் தம் திருமுன்பே அரங்கேற்றிக் கொண்டார்கள். வக்தா, ச்ரோதா, வசனவிஷயம் அனைத்தும் ஒரு மிதுனமே என்ற நிலையில் ஆழ்வார்களைக் கொண்டு பேசுவித்தும், இன்பமாகக் கேட்டு ஆனந்தித்தும், ப்ரதிபாத்யப்பொருள் தாமேயென்றும் வெளிக்காட்டிய மெய்விளக்கு அத்திருமாலே. **அத்திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே** யென்று மாலுற்று தேசிக வள்ளல் பாடியருளிய இப்பாசுரம் ஒன்றுமே அமையாதோ?







திருப்பவித்ரோத்ஸவம்



ஸ்ரீ:







திருப்பவித்ரோத்ஸவம்



கண்ணுக்கினியன



திருப்பவித்ரோத்ஸவம்













ஶ்ரீ:





## திருப்பவித்ரோத்ஸவம்





திருப்பவித்ரோத்ஸவம்













ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்ரீ:




## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்









ஸ்ரீ:





ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்ரீ:

கண்ணுக்கினியன







## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்







ஸ்ரீ:





## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











1

நவராத்ரி உத்ஸவம்



2



3

நவராத்ரி உத்ஸவம்



4



5

நவராத்ரி உத்ஸவம்



6

கண்ணுக்கினியன



நவராத்ரி உத்ஸவம்



ஸ்ரீ:

# நம்மாழ்வார் ஏன் நம் ஆழ்வார்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

நம்மாழ்வார் அனுக்ரஹித்த திருவாய்மொழிப் பாசுரங்களை ஸேவிப்பதெனும் ஸுக்ருதம் அமையப் பெற்றோர் தொடக்கத்திற்கு முன் அநுஸந்திக்கும் தனியன்கள் ஆறு. இவற்றில் நாதமுனிகள் இயற்றியதான **பக்தாம்ருதம் விச்வ ஜநாநுமோதனம்** என்று தொடங்கும் தனியன், திருவாய்மொழி வேதத்தின் ஸாரமென்பதை நிஷ்கர்ஷிக்கும். மதுரகவிகள் இயற்றிய **திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்** என்பதாகத் தொடங்கும் தனியன் வேதத்தின் ஸாரமான திருவாய்மொழிப் பாசுரங்களை அந்தாதி வரிசையில் ஸேவித்த நம்மாழ்வாரைக் கொண்டாடும். ஆளவந்தாரின் திருக்குமாரரான சொட்டை நம்பிகள் இயற்றியதான **மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்** என்ற தனியன் நம்மாழ்வார் திருவடி பணிதலின் ஏற்றத்தினைக் கூறும்.

அநந்தாழ்வான் இயற்றியதான **ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமானுசமுனிதன்** தனியன் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தினை புநர் நிர்தாரணம் பண்ணின ராமாநுஜரைப் போற்றுகிறது. பட்டர் இயற்றியதான **வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்** தனியன் ஸ்ரீரங்கநாதனை முன்னிட்டு நம்மாழ்வார் மற்றும் ராமாநுஜரின் ஏற்றத்தினில் அந்வயிக்கின்றது. பட்டர் அருளியதான மற்றொரு தனியனான **மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்** பரமாத்ம ஸ்வரூபம் எது, ஜீவாத்மாவின் உண்மை நிலையென்ன, அடையப்பட வேண்டியவனான பரமாத்மனை அடைவதற்குத் தடையாக இருப்பவை எவையெவை, அத்தகைய தடைகளை உடைத்து அவனை அடைவதற்கு உபாயமாவது எது என்பவற்றைத் தெள்ளத் தெளிவாக உணர்த்தும்.

இந்த ஆறு தனியன்களை வரிசைப்படுத்தினால் கிடைக்கும் அரும்பொருளாவது,

**(பக்தாம்ருதம்)** வேதத்தின் ஸாரமாகும் திருவாய்மொழியினை **(திருவழுதி)** ஆச்ரிதர் உய்ய ஸேவித்த நம்மாழ்வாரின் **(மனத்தாலும்)** திருவடியினைப் பற்றிக் கொண்டு **(ஏய்ந்த)** விசிஷ்டாத்வைதத்தினை நிர்தாரணம் பண்ணின ராமானுஜரை ஸ்மரித்து **(வான்திகழும்)** எம்பெருமானடி பணிந்தால் **(மிக்க இறை)** அர்த்தபஞ்சக ஜ்ஞானம் உண்டாகி மோக்ஷம் ப்ராப்தமாகும்.

**சதுர்வேதங்களின் தமிழாக்கம்**

திருவிருத்தம் (100 பாசுரங்கள்) ருக் வேதத்தின் ஸாரம்

திருவாசிரியம் (7 பாசுரங்கள்) யஜுர் வேதத்தின் ஸாரம்



பெரிய திருவந்தாதி (87 பாசுரங்கள்) அதர்வண வேதத்தின் ஸாரம்

திருவாய்மொழி (1102 பாசுரங்கள்) ஸாமவேதத்தின் ஸாரம்

ஆச்ரிதர்களாகிய கர்மபத்தர்கள் புநராவ்ருத்தியற்ற நிலை பெற சதுர் வேதங்களின் ஸாரமாக மொத்தம் 1296 பாசுரங்கள் அநுரஹித்தார் நம்மாழ்வார். பொக்கிஷமாகும் இந்தப் பாசுரங்களை ஆழ்வார் அநுஸந்தித்த மரபினை விளக்கும் ஸ்வாமி தேசிகனின் ப்ரபந்தஸார பாசுரம் இதோ.

*முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்*
*முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்*
*மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி*
*மறவாதபடி எண்பத்தேழு பாட்டும்*
*பின்னுரைத்ததோர் திருவாய்மொழி எப்போதும்*
*பிழையற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும்*
*இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்*
*எழில் குருகை வருமாறா இரங்கு நீயே.*

**முன்னுரைத்த திருவிருத்தம்** - ஸம்ஸாரத்தின் இழி நிலையினை நன்கு உணர்ந்தால் மட்டுமே பகவதநுபவம் பரிபூர்ணமாக அமையும் என்பதைத் திருவிருத்தப் பாசுரங்கள் தெளிவுற எடுத்துரைக்கும்.

**முன்னுரைத்த -** பகவதனுபவம் பெறுவதற்கு முன்னம் உரைத்த எனும் பொருளில் வந்து, ஸம்ஸார ஸம்பந்தத்தினை ஒழித்து அநுக்ரஹிக்குமாறு ஆழ்வார் எம்பெருமானிடம் ப்ரார்த்திப்பதாய் அமைந்தன இப்பாசுரங்கள்.

**முறையில் வரும் ஆசிரியம் -** ஸம்ஸார பந்தங்களை அறுத்தெறியுமாறு விஜ்ஞாபித்த ஆழ்வாரின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்த எம்பெருமானது ஸ்வரூபாதி குண லக்ஷணங்கள் ஆழ்வாருக்கு ப்ரத்யக்ஷமாக, அவற்றைத் தான் அநுபவித்த முறையினை ஆழ்வார் விவரிப்பதனால், **முறையில்** திருவாசிரியம் இரண்டாவதாகிறது.

**மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி -** குறையேதுமில்லாத நிறைவான பகவதநுபவத்தினை எம்பெருமான் அநுக்ரஹிக்க, அவனுக்குக் கைங்கர்யம் பண்ண அபேக்ஷிப்பதை ஆழ்வார் வெளிப்படுத்துவதனால் **மன்னிய நற்பொருள்** கொண்டதான பெரிய திருவந்தாதி அடுத்து வந்தது.

**பின்னுரைத்ததோர் திருவாய்மொழி -** இப்படி க்ரமமாக ஒவ்வொன்றாய் வெளிப்படுத்திய ஆழ்வாருக்கு பரிபூரணமான ப்ரஹ்மாநுபவத்தினை எம்பெருமான் ஸங்கல்பிக்க, ஆழ்வாருக்கு நித்ய கைங்கர்யம் ப்ராப்தமானது. ஸம்ஸார பந்தங்கள் நீங்கப்பெற்று எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் புரிவதெனும் பாக்யம் அநுக்ரஹமானபின்னர் ஸேவிக்கப்பட்டதனால் **பின்னுரைத்ததோர்** திருவாய்மொழி.

நம்மாழ்வார் ஸாதித்த நான்கு பாசுரத் தொகுப்புகளைப் பற்றின ஆசார்யன் தேசிகனின் இந்தப் பாசுரம் விளக்குவதாவது,

பகவதநுபவம் பெற அபேக்ஷிப்போர் ஸம்ஸாரத்தின் இழி நிலையை நன்கு உணர்ந்து, அதனைக் களைந்தெறிய எம்பெருமான் திருவடி பணிந்தால், எம்பெருமான்தனது ஸ்வரூபாதி குணலக்ஷணங்களால் ஆச்ரிதனை ஆட்கொண்டு பேரானந்தத்தை அநுபவிக்கச் செய்து நித்ய கைங்கர்யம் பண்ணும் ஆசையினை அவனுக்கு உண்டாக்கி, தானே உபாயமாகி தன்னுடனான ஸம்ச்லேஷத்தினை அவனுக்கு அநுக்ரஹிப்பான்.

**திருவாய்மொழி காட்டும் வழி**

வேதங்களில் நான் ஸாம வேதமாக இருக்கிறேன் என்ற கீதாசார்யனின் திருவாக்கினால் (சதுர் வேதங்களுள்) ஸாம வேதம் ஏற்றம் கண்டது. எம்பெருமானின் (திருவீதிப் புறப்பாடுகளில் அல்லாது) கோயிலுனுள் மட்டுமே ஸேவிக்கப்படுவதனால் ப்ரபந்தங்களுள் ப்ரத்யேகமான ஏற்றமுடையது நம்மாழ்வாரின் திருவாய்மொழி.

புநராவ்ருத்தியினை உபேக்ஷிப்போர் உணரும் வண்ணம் அவனது திருவடியில் தனது சிரஸ்ஸினை ஸமர்ப்பித்து ஸ்ரீமந்நாராயணனின் பொன்னடி ஒன்றே சரணடையத் தக்கது என்பதைக் காண்பித்தனால் தான் கருணையின் ரூபமான ஸ்ரீசடகோபனை நம் ஆழ்வார் என்று கொண்டாடுகிறோம். ஆச்ரிதர் பால் ஸ்ரீசடகோபன் கொண்டிருந்த காருண்யத்தினை உணர்த்தும் இந்த ப்ரகரணம் இன்றளவும் நம்மாழ்வார் திருவடி தொழல் என்று ஒரு உத்ஸவமாகவே ஸ்ரீவைஷ்ணவக் கோயில்களில் கொண்டாடப்படுகிறது.

**சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின** எனத் தொடங்கும் திருவாய்மொழியின் பத்தாம் தசகம், (காரிமாறன்) வைகுந்தம் புகுதலையும், அங்கு கிடைக்கும் பூர்ண கும்ப மரியாதையுடனான வரவேற்பினையும், திருமாமணி மண்டபத்தில் ஸ்ரீவைகுண்ட நாதனுடனான ஸாயுஜ்யம் ப்ராப்தமாவதையும் வர்ணித்து, உபாயத்தை (பக்தி / ப்ரபத்தி) அநுஷ்டித்தோருக்கு, இம்மையில் மட்டுமல்லாது அதற்குப் பின்னரும் அநுக்ரஹமாகும் பேரானந்த அநுபவத்தினைக் காண்பிக்கின்றது.

**நம்மாழ்வார் ஏன் நம் ஆழ்வார்**

சிசுவானது எதற்கு அழுகிறது என்பதை அதனைச் சுற்றியுள்ள ஏனையோர் அறியாதிருப்பினும் அதனை ஈன்ற தாய் அறிவாள். கர்மத் தளைகளில் சிக்கி க்லேசமுறும் ஆச்ரிதர்கள் அவற்றிலிருந்து விடுபட்டு புநராவ்ருத்தியற்ற நிலையினை அநுபவிக்க எம்பெருமானுடனான ஸம்ச்லேஷம் ஒன்றே வழி. இதனை நன்கு அறிந்திருந்த **ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் ஈன்ற முதல் தாய்** கர்மபத்தர்கள் மீது கருணை கொண்டு அவர்கள் உய்வதற்கான மார்க்கத்தினை தனது பாசுரங்கள் மூலம் காண்பிக்கிறார்.

## தேசிக மொழி

திருப்பாற்கடலை விட்டு, மலரில் அவதரித்த பிராட்டியோடு வடமதுரையில் கண்ணனாய் அவதரித்து பூமிதேவியின் பெரும்பாரம் நீங்குவதற்காக பாரத யுத்தத்தை மனமுவந்து நடத்தி முன்பு பாண்டவர்களுக்குத் தூதுவனாய் விளங்கி மனம் தளர்ந்து நின்ற அர்ஜுனனுக்குத் தேர்ப்பாகனுமாகி தேரில் நின்று அவ்வர்ஜுனனைத் தேற்றிய கண்ணன் விஷயத்தில் அடிமை பூண்டவரானோம்.

**– சரமச்லோகச் சுருக்கு**

தான் ஈன்ற மகவு ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்க ஸதுபதேசம் பண்ணும் தாயைப் போன்று, ஆச்ரிதர்கள் எம்பெருமானது ஏற்றத்தினை எளிமையாகப் புரிந்து கொண்டு அவனடி பணியவென, 1102 திருவாய்மொழிப் பாசுரங்களையும் பத்து சதகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு சதகத்திலும் நூறு திருக்குணங்கள் என்ற கணக்கில் எம்பெருமானின் ஆயிரம் திருக்கல்யாண குணங்களைக் காண்பிக்கிறார்.

**முதல் சதகம்:** ஸ்ரீமந்நாராயணனே ஆச்ரிதர்கள் சரணடைய வேண்டிய பரமாத்ம ஸ்வரூபம்

**இரண்டாம் சதகம்:** ஆச்ரிதன் மிக்க ப்ரேமையுடன் அநுபவிக்கத் தகுந்தவன் அவனே

**மூன்றாம் சதகம்:** அவனது திவ்யமான திருமேனி மனதினை மயக்கும் ஸௌந்தர்யமிக்கது

**நான்காம் சதகம்:** எம்பெருமானை அநுபவிப்பதே ஜீவாத்மாவிற்கு சாச்வதமான ஸந்தோஷத்தினைத் தரும்

**ஐந்தாம் சதகம்:** ஜீவாத்மாவிற்கு அனைத்து நற்பலன்களையும் அருளுபவன் அவனொருவனே

**ஆறாம் சதகம்:** ஆசார்ய ஸம்பந்தத்தினை உண்டு பண்ணி உபேயமாகும் அவனை அடைவதற்கு உபாயமாக ப்ரபத்தியை அநுஷ்டிக்கச் செய்பவன் அவனே

**ஏழாம் சதகம்:** ப்ரபத்தியின் மூலம் தன்னடி பணிந்த ப்ரபன்னர்களுக்கு அஹிதமானவைகளை நீக்குபவன் அந்த கருணாமூர்த்தி

**எட்டாம் சதகம்:** ப்ரபன்னர்களின் பக்திக்குக் கட்டுப்பட்டவன் எம்பெருமான்

**ஒன்பதாம் சதகம்:** அனைத்து ஜீவராசிகளுக்கும் ஹிதத்தினையே நினைப்பவன் பகவான்

**பத்தாம் சதகம்:** ப்ரபன்னனை பல வழிகளிலும் சீர்படுத்தி ஆட்கொண்டு தன்னுடனான ஸம்ச்லேஷத்தினை (மோக்ஷம்) அநுக்ரஹிப்பவன் அந்த ஸ்ரீவைகுந்த நாதன்

இவற்றை அழகிய மாலையாகக் கோர்த்துப் பார்த்தோமானால், ஆச்ரிதர்கள் கரை சேர ப்ரபந்ந ஜன கூடஸ்தர் காண்பிக்கும் மார்க்கம் எளிமையாகப் புரியும்.

ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்றுணர்ந்து (1), அவனது திருக்கல்யாண குணங்களில் அந்வயித்து (2), அவனது திருமேனியின் திவ்ய ஸௌந்தர்யத்தினில் லயித்து (3), ஈடுயிணையில்லாத ஸந்தோஷத்தினை ஆச்ரிதன் அநுபவிக்க (4), எம்பெருமான் ஹ்ருதயம் குளிர்ந்து அவனுக்கு ஸகலவிதமான ஹிதங்களையும் அநுக்ரஹிக்கிறான் (5). அப்படி ஒரு அநுக்ரஹமாக ஸதாசார்யனுடனான ஸம்பந்தம் உண்டாகி ப்ரபத்தி அநுஷ்டானம் ப்ராப்தமாக (6), அவனுக்கு அஹிதமானவைகளைப் போக்கியருளும் எம்பெருமான் (7), அவனது பக்தியில் கட்டுண்டு (8), அவனை நல்வழிப்படுத்தி (9) பலவிதமான கைங்கர்யங்களைப் புரியச் செய்து தன்னுடனான ஸாயுஜ்யத்திற்கு ஆவன செய்கிறான் (10).

இப்படியாக, ஸ்ரீமந்நாராயணனின் ஏற்றத்தினை ஆச்ரிதர் உணரவென அவனது ஆயிரம் திருக்கல்யாண குணங்களைத் தன் பாசுரங்கள் மூலம் காண்பித்த ஆழ்வார், அவனே பரதத்வம் என்றுணர்ந்து அவனடி பணிந்த ஆச்ரிதர்களின் விச்வாஸம் மேலும் த்ருடப்பட, புநராவ்ருத்தியற்ற நிலை எப்படி அநுக்ரஹமாகிறது என்பதை அப்பாசுரங்களின் மூலமே விளக்குகிறார்.

ஸம்ஸாரமென்னும் பேரிருளில் சிக்கித் தவிக்கும் கர்மபத்தர்கள், அவர்களது அஜ்ஞானமெனும் அந்தகாரத்தினின்று மீள்வதற்கு, அர்த்த ஜ்ஞான ப்ரகாசம் உண்டாகும்படியாக சாஸ்த்ரமெனும் தீபத்தினை தனது பாசுரங்கள் மூலம் ஏற்றி வைத்தவர் நம்மாழ்வார். அவரது திருவடியினை உபாயமாகப் பற்றிக் கொண்டு உபேயமாகும் எம்பெருமானை அடைவதற்கு அருளுமாறு நம் ஆழ்வாரான நம்மாழ்வாரிடமே விண்ணப்பம் செய்வோம். ❊

## ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

| |
|---|
| **தீபாவளி உத்ஸவம்**<br>அக்டோபர் 31 (வியாழன்) |
| **பேயாழ்வார் உத்ஸவம் (10 நாட்கள்)**<br>நவம்பர் 1 (வெள்ளி) முதல் 10 (ஞாயிறு) வரை |
| **அன்னகூட உத்ஸவம்**<br>நவம்பர் 2 (சனி) |
| **ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்**<br>நவம்பர் 6 (புதன்) |
| **ஸ்ரீ தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி உத்ஸவம்**<br>நவம்பர் 7 (வியாழன்) |
| **பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>நவம்பர் 8 (வெள்ளி) |
| **பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>நவம்பர் 9 (சனி) |
| **பேயாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>நவம்பர் 10 (ஞாயிறு) |

ஶ்ரீ:

# பித்தன் பித்தர்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ச்ருங்கார ரஸத்தையே போக்யமாகக் கொண்ட தலைவன்-தலைவினியிடத்தில் அதன் பரிமாற்றமே ப்ரதானமாக உண்டாக்கக்கூடியது. இவர்கள் ஒருவரிடத்தில் இன்னொருவர் தீராக் காதல் கொள்வதும், விட்டுப் பிரிந்தால் வாடுவதும், அவர்களை எண்ணிக் கரைவதும், பிரிவிற்றாமையால் அலற்றுவதும் வழக்கம். இதனைப் 'பித்து' என்றும் இக்குணத்தை உடையவர்களை 'பித்தர்கள்' என்று சொல்வதும் உலக வழக்கம். தலைவனிடத்தில் தலைவிக்கும், தலைவியிடத்தில் தலைவனுக்கும் பித்து பிடிப்பதும் அவர்களுக்குள் உள்ள பரிமாற்றத்தையும் அக இலக்கியங்களில் காணலாம்.

எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருள்பெற்ற நம்முடை ஆழ்வார்களோ பக்திரஸத்தையே மோந்தும், பருகியும், உண்டும் இருந்தவர்கள். பகவதனுபவத்தையே பரம போக்யமாகக் கொண்டவர்கள். பரமைகாந்திகளான இவர்களுக்கு ச்ருங்கார ரஸம் பொருந்துமா? இப்படிப்பட்ட மஹாவிவேகிகள் ஒரு பித்தனிடத்தில் பித்து பிடித்து இருந்தார்கள் என்றால் ஏற்க முடியுமா?

யார் அந்த பித்தன்?

*தாய் முலைப் பாலில் அமுதிருக்கத் தவழ்ந்து தளர்நடை இட்டுச் சென்று*
*பேய் முலை வாய் வைத்து நஞ்சை உண்டு பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய்*
*ஆய்மிகு காதலோடு யான் இருப்ப யான் விட வந்த என் தூதியோடே*
*நீ மிகு போகத்தை நங்குகந்தாய் அதுவும் உன் கோரம்புக்கேற்கும் அன்றே.*

(பெருமாள் திருமொழி 6-4)

'தாயாகிய யசோதைப் பிராட்டி வேண்டியெடுத்து மடியில் வைத்துக்கொண்டு மிகுந்த அன்புடன் மிகவும் போக்யமான முலைப்பாலை அமுதுண்ணச் செய்விக்கக் காத்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் இவன் அபேக்ஷிப்பது என்ன? தானே தவழ்ந்து சென்று, தடுமாறி, சிறிது சிறிதாக அடியெடுத்து வைத்து, தளர்நடையாய்ச் சென்று பூதனையினுடைய முலையிலே தன் திருவதரங்களை வைத்து அம்முலை மீது தடவிக்கிடந்த விஷத்தை உறிஞ்சி அமுது செய்கிறானே. அறிவொன்றுமில்லாத ஆயர்குலத்தவரும் 'பித்தன்' என்று பரிஹஸிக்கும்படி நின்ற பிரானே! எது ஆசைப்படக்கூடியது, எது வெறுக்கத்தக்கது என்ற விவேகம் இல்லாதவனா நீ? இல்லை நீ செய்யும் தீம்புகளில் இதுவும் ஒன்றோ?'

*மொய்த்தவல் வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால்*
*கத்திரபந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்*
*இத்தனை அடியர் ஆனார்க்கு இரங்கும் நம் அரங்கனாய*
*பித்தனைப் பெற்றும் அந்தோ! பிறவியுள் பிணங்குமாறே.* (திருமாலை - 4)

'க்ஷத்ரியர்களுக்குள் மிகவும் நீசனான மற்றும் கொடியவனானவன் க்ஷத்ரபந்து. வில்லும் கையுமாக வனங்களில் திரிந்து கொண்டு, வருபவரை எல்லாம் ஹிம்ஸித்த மாபாவி அன்றோ அவன். காம-க்ரோத-லோப-மோஹ-மத மாத்ஸர்யங்கள் நிறைந்த அவனுக்கு மாமுனிவர் ஒருவர் கோவிந்த நாம ப்ரபாவத்தை உபதேசிக்க, அவனும் அவ்வாறே மூன்றே மூன்று அக்ஷரங்கள் கொண்ட 'கோவிந்தா' என்ற நாமத்தை மட்டும் உச்சரித்தே பரம ப்ராப்யத்தை அடைய முடிந்ததே. ஏனைய தெய்வங்கள் எல்லாம் யாக-யஜ்ஞாதிகளுக்கு உள்ளம் குளிர்ந்து அவர்களை ஆச்ரயித்தவர்களுக்கு அல்ப வரங்களைக் கொடுக்க, ஓர் அல்ப வ்யாபாரத்தினால் வசீகரிக்கப் பெற்று கொடும்பாவிகளுக்கும் மோக்ஷமாகிய பரம ப்ராப்யத்தை அளிக்கும் அழகிய மணவாளா! ஆச்ரிதர்கள் விஷயத்தில் இப்படி அல்ப வ்யாஜத்தை மாத்ரமே எதிர்பார்த்திருக்கும் பித்தனாய் இருப்பவனே! உன்னை சேஷியாகப் பெற்றவர்கள் ஸம்ஸாரத்தில் அகப்பட்டு வருந்துவது தகுமோ!'

*உண்டாய் உலகேழ் முன்னமே உமிழ்ந்து மாயையால் புக்கு*
*உண்டாய் வெண்ணெய் சிறு மனிசர் உவலை ஆக்கை நிலை எய்தி*
*மண் தான் சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காகும்பீர் சிறிதும் அண்டா*
*வண்ணம் மண் கரைய நெய்யூண் மருந்தோ? மாயோனே.* (திருவாய்மொழி 1-5-8)

'அற்ப மனிதருடைய அருவருப்பான உடம்பினது நிலைமையை அடைந்து, மாயையினால் இவ்வுலகில் வந்து சேர்ந்து வெண்ணெயை அமுதுசெய்தாய்; உனக்காக அப்பமும் அக்காரம் கலந்த பாலும், பாயசமும் வெண்ணெயையும் அமுது பண்ணைக் கொடுத்தேன். ஆனால் நீயோ மண்கட்டிகளை விழுங்குகிறாயே! ஏழுலகங்களையும் முற்காலத்திலே திருவயிற்றிலே வைத்து பின்பு அவற்றை வெளிப்படுத்தினாய்.

அதற்கான மருந்தோ இம்மண்கட்டிகள், மாயோனே?! ஆச்சரியமான குணசேஷ்டிதங்களையுடையவனே!’

எம்பெருமானிடத்தில் இருந்த பக்தியின் மிகுதியாலும், அவன் மீது கொண்ட பரிவினாலும் அவன் திவ்ய சேஷ்டிதங்களைக் கண்டு பிறர் அவனை பித்தன் என்று ஏசுவார்களோ என்ற அஸஹ்யம் ஆழ்வார்களுக்கு. ஸர்வஜ்ஞனை பித்தன் என்று கூறுவது பொருந்துமோவென்னில் கோதா-யசோதா-பராங்குச-பரகாலாதிகள் பாவத்தில் பொருந்தும்.

பித்தனிடத்தில் பித்து பிடித்த ஆழ்வார்கள் நிலை தான் எப்படியிருந்தது?

*வார் புனலன் தண் அருவி வட திருவேங்கடத்தெந்தை*
*பேர் பல சொல்லிப் பிதற்றிப் பித்தர் என்றே பிறர் கூற*
*ஊர் பல புக்கும் புகாதும் உலோகர் சிரிக்க நின்றாடி*
*ஆர்வம் பெருகிக் குனிப்பார் அமரர் தொழப்படுவாரே.*

(திருவாய்மொழி 3-5-8)

‘சிறந்த தீர்த்தங்களையுடையதும் அழகிய குளிர்ந்த அருவிகளையுடையதுமான வடக்குத் திருமலையில் நிற்கிற எம்பெருமானுடைய பல திருநாமங்களையும் வாய்வந்தபடி சொல்லி பல க்ஷேத்ரங்களுக்குச் சென்று உலகர்கள் இவர்களைப் ‘பைத்தியக்காரர்கள்’ என்று ஏளனம் செய்து சிரிக்கும்படியாக ஆடியும் பாடியும் திருவேங்கடமுடையானிடத்தில் கொண்ட பக்தியின் மிகுதியால் கோலாஹலஞ்செய்து கொண்டிருந்தார்கள்.’

அது மட்டுமின்றி,

*மாரனார் வரி வெஞ்சிலைக்காட் செய்யும்*
*பாரினாரொடும் கூடுவதில்லை யான்*
*ஆர மார்வன் அரங்கன் அனந்தன் நல்*
*நாரணன் நரகாந்தகன் பித்தனே.*
(பெருமாள் திருமொழி 3-3)

‘மன்மதனுடைய அழகிய கொடிய வில்லுக்கு ஆட்பட்டு இப்பூமியிலுள்ள ப்ராக்ருதர்களோடு நான் கூடுவது இல்லை. முக்தாஹாரத்தைத் திருமார்பிலே அணிந்துள்ளவனாய் மன்மதனுக்கெல்லாம் மன்மதனாய், அளவிடமுடியாத ஸ்வரூப-ஸ்வபாவங்களையுடையவனாய் ஸர்வ ஸ்வாமியாய் அடியவர்களை நரகத்தில் சேராதபடி காத்தருள்பவனான ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில் மட்டுமே நான் பித்தன்’ என்றறிவித்தார்கள்.

*மொய்த்துக் கண் பனி சோர மெய்கள் சிலிர்ப்ப ஏங்கி*
*இளைத்து நின்று*
*எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து ஆடிப் பாடி*
*இறைஞ்சி என்*
*அத்தன் அச்சன் அரங்கனுக்கு அடியார்கள் ஆகி*
*அவனுக்கே*
*பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள் ற்றையார் முற்றும்*
*பித்தரே.* (பெருமாள் திருமொழி 2-9)

‘ஆநந்த பாஷ்பமானது இடைவிடாமல் சொரியவும் மயிர்க்கூச்செறியவும் உடல் நெஞ்சு தளர்ந்து களைத்துப் போய் நிலை தளர்ந்து மஹா கோலாஹலத்தோடு கூடிய நர்த்தனத்தைப் பண்ணி நின்றவிடத்து நில்லாமல் பல வித ஆட்டங்களாடிப் பாட்டுகள் பாடி வணங்கி, எனக்குத் தந்தையாயும் ஸ்வாமியாயுமுள்ள ஸ்ரீரங்கநாதனுக்கு அடியவர்களாய் அந்த ரங்கநாதன் விஷயத்திலேயே பித்தேறித் திரிகிறவர்கள் பைத்தியக்காரர்களல்லர்; இந்த வ்யாமோஹமில்லாத மற்றபேர்களெல்லாம் தான் பைத்தியக்காரர்கள்.’

எம்பெருமான் தன்னிடத்தில் சரண் புகுந்த அடியவர்கள் விஷயத்திலும், அடியவர்கள் ஸர்வ ஸ்வாமியான அவனிடத்திலும் வ்யாமோஹம் கொள்வதென்பது ஸ்வத: ப்ராப்தம். இதனை அறியாமல் அல்ப ஸுகங்களான தேஹ-ஐச்வர்யாதிகளில் ஈடுபட்டு விஷயப்ராவண்யத்தில் மோஹம் கொள்பவர்களே பைத்தியக்காரர்கள் என்பது திண்ணம். ✻


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**
**‘ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்’**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya ⑲

## Thiruman — No Mere Mark But A Hallmark Of Srivaishnavam

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

'Thiruman' — as 'Oordhva Pundram' is known in Tamil — is not merely a mark that is worn by Srivaishnavas but is also a hallmark of Srivaishnavam itself. This 'Pundram' is the second constituent of the Pancha Samskaaram, popularly known as Samaasrayanam (the others are Thaapam, Naamam, Manthram, Yaagam, in that order). The fact that it is taught by the Acharya catapults its significance to great heights.

The literal meaning of the Sanskrit term 'Oordhva Pundram' is 'upward mark' ('Oordhva' is 'upward' and 'Pundram' means 'mark'). Seemingly, there exists a lack of clarity or even big differences of opinion as to the details regarding it. There is even a perception that the concept itself is of a recent origin and was started by Sri Ramanuja, drawing from only the Paancharaathra Aagama texts. But, in reality, we have all kinds of other legends as authorities such as the Vedas, Smruthis, Puraanas, Saasthras laid down by great sages, works of Azhwars and Acharyas.

Based on these scriptures, Sri Ramanuja, a traditionalist that he was, propounded the import of Thiruman to the value of our Sampradaya and streamlined the practice of wearing it. And Swami Desika carried it forward, emphasised its greatness and established Ramanuja's ideology through his work 'Sachcharitha Rakshai', extensively quoting from the said legends.

Sachcharitha Rakshai is a philosophical work that comprises three sections, namely, Sudharsana Paanchajanya Vidhi (deals with the procedures relating to Samaasrayanam), Oordhva Pundra Dhaarana Vidhi (deals with the procedure of preparing and applying the Thiruman) and Bhagavan Nivedhitha Upayoga Vidhi (deals with the procedure of offerings made to the Lord).

Sachcharitha Rakshai is such a legendary work by itself that it delves deep into the issue and answers all the questions — the five 'W's and the 'H' (What, Who, Why, When, Where and How) — that might arise about Thiruman. We shall take a look at some important points under each of the heads.

***What?***

- The Thiruman is a mark which all Srivaishnavas should apply/wear (only) facing up in the middle part of the forehead. It is a daily-routine which has to be adhered strictly.
- Even for other Brahmanas, the mark should face up. Irrespective of the Varna or Asrama, the Oordhva Pundram (upward mark) is the ideal one.
- Not only literally does it go upward, but figuratively also it has the power to lift us.
- The shape of the Thiruman denotes the Lord's foot. The bottom semi-circle is akin to His heel and the outline of the top portion resembles the toe.
- Wearing it is called 'Thiruman Kaappu' in Tamil. 'Kaappu' denotes 'applied paste' (as in Chandana Kaappu – Sandal paste). Also it aptly means 'protection' as it protects those who wear it from bad things and provides auspiciousness.

***Who?***

- All, especially Srivaishnavas, should wear the Thiruman.
- "நீறு செவ்வே இடக்காணில் நெடுமால் அடியார் என்றோடும் (Thiruvoymozhi 4-4-7) — Seeing men who have worn the Thiruman upward, (she) will run to them saying "they are the Lord's devotees".
- Ladies should also wear the Thiruman, only that it is customarily done from the level of the eye-brows and shorter as compared to Sri Choornam.

***Why?***

- Wearing the Thiruman invokes the Lord's grace for now and will lead to Moksham in due course.
- It cleanses the body and mind; creates peace, purity and devotion.
- Yama's servants are scared of those who wear it.
- No ritual will be valid or complete if done without the Thiruman. It will be a total waste.
- Doing a ritual without the Thiruman is akin to doing it without the sacred thread; effectively invalid.

- It is a sin even to see someone without the Thiruman. If one happens to see someone like that, he should make amends by seeing the Sun.

***When?***

- The Thiruman has to be worn after taking bath in the morning.
- It has to be there on the forehead at all times — not only while worshipping, but while eating, reading and sleeping too.
- It has to be intact mandatorily when doing the daily chores, the Vedic rituals and those related to the ancestors.

***Where?***

All points discussed hitherto relate to the Thiruman on the forehead. However, it has been categorically laid down in the Saasthras that 12 have to be worn representing the 12 Vyuha forms of the Lord in different places of our body. Additionally, one for Vasudeva has also been provided for.

The tabular column given below lists the respective places, the Manthras for Vyuha forms of the Lord and their corresponding Consorts. Even as we wear these, we should meditate upon them and chant these names. It should be noted that the Pranavam should be prefixed to each Naama.

Chanting Swami Desika's Prabandham 'Panniru Naamam' when applying the Dwaadasa Pundrams (the 12 Thirumans) is considered special in our Sampradaya.

***How?***

- Ideally, the Thiruman has to be white, symbolising the 'Sathva' quality.
- It should be soft, soluble, wearable on the skin and not smelly.
- One should apply it for himself, not by others; should be applied with the right hand only under normal circumstances. Should use the ring finger ideally; the nail should not be used.
- It should be reasonably broad, long, straight and neat.
- There should be gap between the flanks. The space is said to be the dwelling place of Lakshmi. It is symbolised by the Srichoornam.
- The curvy part should start from the root of the nose and drawn upward on both sides till the top of the forehead.

Swami Desika concludes the treatise with the following Sloka:

ஸ்ரீமத் வேங்கட நாதேந ச்ருதிஸ்ம்ருதி சதைரிதி!
விதாநம் ஊர்த்வ புண்ட்ரஸ்ய விஸ்தரேண நிரூபிதம்!!

"(The concept of) The upward mark, that is, Thiruman, has been thoroughly proved by Venkatanatha, on the basis of hundreds of references drawn from the Vedas and Smruthis."

Let us bow our heads in salutation to the great Acharya who, with tremendous foresight, took pains to show us the perfect path as regards the Thiruman with this monumental work.

| S. No. | Place | Manthra for Thiruman | Manthra for Srichoornam |
|---|---|---|---|
| 1 | **Forehead** | Kesavaaya Nama: | Sriyai Nama: |
| 2 | **Stomach** | Narayanaaya Nama: | Amruthodhbhavaayai Nama: |
| 3 | **Chest** | Madhavaaya Nama: | Kamalaayai Nama: |
| 4 | **Neck** | Govindaaya Nama: | Chandrasodharyai Nama: |
| 5 | **Right stomach** | Vishnave Nama: | Vishnupathnyai Nama: |
| 6 | **Right arm** | Madhusudhanaaya Nama: | Vaishnavyai Nama: |
| 7 | **Right neck** | Thrivikramaaya Nama: | Vararohaayai Nama: |
| 8 | **Left stomach** | Vamanaaya Nama: | Harivallabhaayai Nama: |
| 9 | **Left arm** | Sridharaaya Nama: | Saarnginyai Nama: |
| 10 | **Left neck** | Hrishikesaaya Nama: | Devadevikaayai Nama: |
| 11 | **Bottom of the back** | Padmanabhaaya Nama: | Surasundharyai Nama: |
| 12 | **Back neck** | Damodaraaya Nama: | Mahalakshmyai Nama: |
| 13 | **Above forehead** | Vasudevaaya Nama: | Sarvaabhishta Phalapradhaayai Nama: |

***(to be continued…)***

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ⑲

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 18**

**Saasthreeya Niyamana Adhikaram**

Now that a Chethana knows he has to do Kainkaryams to Bhagavan and Baagavathas in his time left in the world, how should he do it? As per Saasthras or not? Swami avers that in this dark world, Saasthras serve as a torchlight to guide us and hence, he should do Kainkaryams only as per Saasthras and when Saasthras themselves give options in specific Kainkaryams, he could choose one of them as per his wish.

When Sri Bhashyakara was about to ascend to Srivaikuntam, many Sishyas were inconsolable and proposed to die along with him. Sri Bhashyakara called them and swore on Sri Alavandar's feet that he would consider their connection severed if such a thing were to happen. They were very sad and asked him what they should do. Bhashyakara replied:

"If a person is a Prapanna, then the journey of his Athma is dependent upon Bhagavan. He doesn't have any say in it afterwards. The journey of his body is due to his Karmas. No use crying over it. If he cries about it, then he is a Naasthika (atheist). So, there is nothing left to do regarding both journeys.

But then, should he do as he pleases with his sense organs? No. That is against his Svarupa. Though the sense organs have no further involvement towards Upaayam, they have to be used for Kainkaryams.

There are five Kainkaryams fit for a Prapanna to do while he remains in this world.

a) Study Sri Bhashyam and propagate it;
b) If he is not capable of it, learn Azhwars' Paasurams and propagate them;
c) If he is not capable of it, present lamps, garlands, make arrangements for Thaligai, decoration etc., to Archavathara Perumal in Divyadesams;
d) If he is not capable of that, contemplate upon the meaning of Dvayam; and
e) If he is not capable of that, rest under the auspices of a Baagavatha who considers him as his own.

Such a Prapanna has to be careful about three things: Well-Wishers, Haters and Indifferent people. Well-Wishers mean Srivaishnavas here. Haters are the ones who hate Bhagavan. Indifferent people are ordinary Samsaaris.  A Prapanna should conduct himself with Srivaishnavas in a manner, as if he is applying cooling sandal paste on himself or adorning himself with flowers or experiencing a cooling breeze or moonlight, i.e., He should regard their company as pleasurable as the above. He should fear the company of haters, as if he is confronting a live snake. If he sees Samsaaris he should ignore them, as if seeing a small stone or stick in the path while walking. If they approach in good faith, they should be taught the actual truth and if they don't, feel sorry for them for losing out.

If a Prapanna ignores Sri Vaishnavas due to consideration of material wealth, desires, etc., then Bhagavan would feel ferocious, as a King would, if one disrespects the Prince in the presence of his father, the King. If he is friendly with haters in consideration of wealth etc., it is similar to a queen, while being the consort of a powerful King, begging lowly beings for something which is irrevocably demeaning to the King. Bhagavan would be very much displeased. If he seeks the company of Samsaaris, Bhagavan will ignore him because, the knowledge he gained has not been put to use as it is like he doesn't know the difference between a valuable gem and a stone.

So as Bhashyakara averred, material pleasures and desires which are against Dharma are to be avoided entirely and for even those suited to Dharma, a Prapanna should remain steadfast in his conduct towards the above three types of people. Swami goes on to give Pramaanaas for this.

Thus, Kainkaryams also should not be done however he pleases, but as per Saasthras, not seeking any benefit, with a pure heart. If he crosses this line, harm will befall him certainly. If he doesn't earn Bhagavan's forgiveness for the transgression, before becoming a Muktha, he has to undergo punishment for it. And also, being a Prapanna, the thought that he has caused displeasure to Bhagavan is a punishment in itself causing agony. There is no hell worse than

this. He would strive to remove His displeasure and if a Prapanna doesn't feel that way, then his devotion to Bhagavan and desire for Moksha is suspect.

That Saasthras should not be disobeyed, is shown in Prapthi Virodhi context in the three Rahasyas. This Saasthraic commands will complete the incomplete Upaaya of some, by removing the impediments to Upaaya. For completed Upaaya, they serve to please Bhagavan and ensure that they do not cause His disregard by disobeying them.

Swami finally clarifies on Ajnyaa and Anujnyaa Kainkaryams – the first category is mandatory and would cause harm if not done, and the second category being optional, may be done, but if done, to be done according to Saasthras to avoid harm.

*(to be continued…)*

## வைணவ வழக்குச் சொற்கள் 2

**அறுகாழி:** மோதிரம்

**அமுது செய்யப்பண்ணல்:** நைவேத்யம் செய்தல்

**அங்கணம்:** மேடை; பெரிய இடம்; பாத்திரம் வைக்கும் இடம்

**அமுது பாறை:** வடித்த சாதத்தைக் கொட்டிப் பரப்பும் கருங்கல் பாறை

**அனுஸந்தானம்:** கைங்கர்யம்; அன்றாடக்கடமை; நினைத்தல், த்யானித்தல், ஓதுதல், நடைமுறைப் படுத்துதல்

**அபிஷேகம்:** திருமுடி

**அருளிச்செயல்:** நாலாயிர திவ்யப்ரபந்தம் (ஆழ்வார்கள் பாடியருளிய நூல்கள்)

**அத்யாபகர்:** (1) இராமாநுஜ அடியார்; (2) வேதம் / பிரபந்தம் கற்பிக்க வல்லார்

**அனந்தாழ்வான்:** (1) ஆதிசேஷன்; (2) இராமானுஜரின் சிஷ்யரான ஒரு ஆசார்யர்

**அவப்ருதம்:** தீர்த்தவாரி உத்ஸவம்; மங்கள ஸ்னானம் (முடிவில்)

**அனுகாரம்:** ஒன்றைப் போல பாவித்து நடந்து கொள்ளல்

**அக்குப்புலி:** ஒரு ஆபரணம் (புலிநகம்)

**அபியுக்த(ன்):** மிகப் பெரியவன்

**அடிப்படி:** கர்ப்ப க்ருஹம்; கருவறை

**அத்யயன உத்ஸவம்:** வைகுண்ட ஏகாதசிக்கு முன்னும் பின்னுமான, பகல்பத்து இராப்பத்து என்று கூறப்படும் மொத்தம் 22 நாள் திவ்யப்ரபந்தம் ஓதும் விழா (திருவரங்கத்திலும், பிற திருமால் தலங்களிலும்)

**அனத்யயன காலம்:** பொதுவாக, கார்த்திகை மாதம் ரோகிணி முதல் தை உத்திரம் முடிய உள்ள நாட்களில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திவ்ய ப்ரபந்த ஸேவையோ. காலக்ஷேபமோ நிகழ்த்துவது இல்லை(திருப்பாவை, விதி விலக்கு)

**அதிகாரி:** உரிமை, தகுதி உடைய நபர்

**அர்ச்சை, அர்ச்சாவதாரம்:** கோயில்களில் எழுந்தருளி யுள்ள விக்ரஹ உருவிலான இறைவன்

**அத்தாணிச் சேவகம்:** பிரியாது கூடவே இருந்து செய்யும் தொண்டு. (பெருமாளுக்கு அருகிலேயே எப்போதும் இருந்து செய்யும் கைங்கர்யம்)

**அடைக்காய்:** பாக்கு

**அகவாய்:** நெஞ்சுள்ளே

**அடிக் கோலுதல்:** ஆரம்பித்தல்

**அந்யாபதேசம்:** வெளிப்படையான அர்த்தம்

**அழகிய மணவாளன்:** திருவரங்கம் உத்ஸவர்

**அகடித கடனா ஸாமர்த்யம்:** சேராதவற்றைச் சேர்க்கும் (கூடாததைக் கூட்டுவிக்கும்) திறன்; முரணான பொருட்களை ஒன்று சேர்க்கும் மாயம்

**அநந்ய கதித்வம்:** வேறு கதியின்மை

**அடிக்கொறடு:** பாதரக்ஷை

**அத்யயனம்:** வேதம், ப்ரபந்தம் தொடர்ச்சியாக ஸேவித்தல்

**அல்ப சங்கை, பஹிர் சங்கை:** இயற்கை உபாதைகள்

**அனுஷ்டானம்:** கடைப்பிடித்தல்; நித்ய (அன்றாட) கர்மங்களைச் செய்தல்

**அனுபவித்தல்:** கண்டு மகிழ்தல்; கேட்டு மகிழ்தல்; உணர்ந்து மகிழ்தல்

**அரவணை:** சேஷ சயனம்; திருவரங்கப்பெருமாள் இரவில் கடைசியாக அமுது செய்யும் சர்க்கரைப் பொங்கல்

**அரையர்:** ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற தலங்களில் பரம்பரையாக திவ்ய ப்ரபந்தத்தை ராக, தாள, அபிநயத்துடன், பொருட்சிறப்பு வெளிப்படுமாறு, ஸன்னிதியில் பாவனையுடன் வழங்குபவர். இதற்கென சிறப்பான தலையணியும் மாலையும் அணிவர்

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

***(தொடரும்...)***

ஸ்ரீ:



## *With Pranams:*

**R. Premkumar**

Devadi Street, Mylapore, Chennai 600 004.

&

**Akshara Play School**

Arisikaran Street, Mylapore, Chennai 600 004.

**SVDD thanks R. Premkumar & Akshara Play School**

for sponsoring this month's issue of Desika Sandesam

**Sponsorships and donations towards publication expenses are welcome**



ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்



மஹாநவமி ஆஸ்தானம்